# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
# JAFFNA HINDU COLLEGE

| 22 | T | I |
|---|---|---|

## முதலாந் தவணைப் பரீட்சை - 2017
## 1st Term Examination - 2017

| | | | |
|---|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் Tamil | | நேரம் Time | 1மணித்தியாலம் |
| தரம் Grade | 10 | பகுதி Part | I |

❖ **ஒன்று தொடக்கம் நாற்பது வரையுள்ள பல்தேர்வு வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளித்தாளில் உரிய இலக்கத்தில் புள்ளடி இடுக.**

(1) நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலகம் அளித்தது. அனுகூலம் என்பதன் கருத்து

1. வாய்ப்பு 2. சாதகம் 3. பிரதிகூலம் 4. செயல்

(2) "நாயனையார் கேண்மை கெழீஇக் கொள்ளல் வேண்டும்"- இங்கு கெழீஇ என்பதன் ஒத்த கருத்துச் சொல்

1. விலக்கி 2. தழுவி 3. நெருங்கி 4. வழுவி

(3) புராதன காலத் தமிழர்கள் சீனர்களைக் போல சித்திர எழுத்துக்களை எழுதினர். புராதனம் என்பதன் எதிர்கருத்து

1. பழமை 2. முற்காலம் 3. புண்ணியம் 4. நவீனம்

(4) "பண்டே பழகியிருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை." புல்லர் என்பதன் எதிர்க்கருத்து

1. தீயோர் 2. நல்லோர் 3. அறிவிலி 4. மூத்தோர்

(5) பாணன் யாழ் இசைத்துப் பாட்டுப் பாடினான் பாணன் என்பதன் எதிர்பாற்சொல்

1. பாணத்தி 2. பாணி 3. பாணள் 4. விறலி

(6) சிலை, தனு, சாபம் என்பன குறிக்கும் ஒரு சொல்

1. கடல் 2. வில் 3. மழை 4. சிற்பம்

(7) வயலும் வயல் சார்ந்த இடம்

1. முல்லை 2. நெய்தல் 3. மருதம் 4. குறிஞ்சி

(8) வறுமை, செல்வம் இரண்டினையும் ஒன்றாகவே கருதும் பற்றற்ற நிலையை குறிக்கும் அருஞ்சொற்றொடர்

1. குற்றங் கழைந்து குணங் கொண்டு
2. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்
3. ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குதல்
4. ஏழை எளியவர் வாயில் அடியாமல்

(9) கிடைத்தற்கரிய நூதன பொருள்கள் மியூனியத்தில் (Museum) வைக்கப்பட்டுள்ளன. மியூனியம் என்ற சொல்லின் தமிழ்ச்சொல்

1. அருங்காட்சியகம் 2. புகலரண்
3. சுவடிகள் கூடம் 4. காட்டரண்

(10) நூலாசிரியர் தவிர்ந்த பிறர் ஒருவரால் நூல் ஒன்றுக்கு வழங்கப்படும் உரை

1. பதிப்புரை 2. அணிந்துரை 3. முன்னுரை 4. அனுபந்தம்

(11) கலகம், கழகம், களகம் என்பன முறையே தரும் பொருள்

1. சபை, குழப்பம், நெற்கதிர் 2. குழப்பம், சபை, நெற்கதிர்
3. நெற்கதிர், சபை, குழப்பம் 4. குழப்பம், நெற்கதிர், சபை



kalvi.lk

(12) கெடுதல், தோன்றல், விகாரம் இரண்டும் இடம்பெற்ற சொற்புணர்ச்சி

1. கடற்கரை 2. குளக்கரை 3. நதிக்கரை 4. ஏரிக்கரை

(13) மரத்தை என்ற பகுபதத்தை பிரித்தால் வரும் அத்து என்பது

1. சந்தி 2. இடைநிலை 3. சாரியை 4. விகுதி

(14) பின்வருவனவற்றில் தொழிற்பெயராக அமையாதது

1. ஓடுதல் 2. ஓட்டம் 3. ஓடும் 4. ஓடல்

(15) அரசன், இடம், தலைவன் எனப்பல பொருளை குறிக்கும் ஒரு சொல்

1. அரி 2. பதி 3. பார் 4. கோன்

(16) பின்வருவனவற்றுள் ககரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1. கடல் 2. பங்கம் 3. கதவு4. கப்பல்

(17) துரவுவில் இருந்து தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சினர். துரவு என்பது எப்பிரதேச வழக்குச் சொல்

1. கிழக்கு 2. வடக்கு 3. மேற்கு 4. தெற்கு

(18) "விழித்தாமரை" இதில் வந்துள்ள அணி

1. உவமை 2. தற்குறிப்பேற்றம் 3. உருவகம் 4. உயர்வுநவிற்சி

(19) ஒரு விடயம் பற்றி ஆழ அகலமான அறிவைக் கொண்டிருத்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்

1. துறைபோதல் 2. நுனிபுல் மேய்தல் 3. ஆழம்பார்த்தல் 4. வெளுத்துக்கட்டுதல்

(20) "பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது" என்ற பழமொழியின் பொருள் கொண்ட இன்னொரு பழமொழி

1. பானையில் இருந்தால் அகப்பையில் வரும்
2. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது
3. அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையாது
4. ஆறுகடந்தால் அண்ணனென்ன தம்பி என்ன?

(21) பெயர் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் இடம்பெறும் சொற்தொகுதி

1. கடி, கல், நடு 2. அணை, கலை, உண்
3. பாடு, நில், எழு 4. விதை, படி, கல்

(22) குழப்ப நிலையை உணர்த்தப் பயன்படும் இணைமொழி

1. குப்பை கூளம் 2. அமளிதுமளி 3. தில்லுமுல்லு 4. ஏச்சுப்பேச்சு

(23) இடையறாத அன்பை வெளிப்படுத்தல் என்னும் பொருளுக்கேற்ற உவமைத் தொடர்

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
2. ஊருணி நீர் நிறைத்தாற் போல
3. உடுக்கை இழந்தவன் கை போல
4. கண்ணை இமை காப்பது போல

(24) சாக்கு போக்கு சொல்லுதல் எனும் பொருளைத் தரும் மரபுத் தொடர்

1. இடித்துரைத்தல் 2. பசையடித்தல்3. தட்டிக்கழித்தல் 4. ஆறப்போடுதல்

(25) குதிரைக்கு குட்டி போல சிங்கத்திற்கு

1. குருளை 2. போதகம் 3. பிள்ளை 4. கன்று

(26) பின்வருவனவற்றுள் உம்மைத் தொகையாக அமையும் சொற்தொகுதி

1. இராப்பகல், உயிர்மெய் 2. இரும்புக்கரம், பவளவாய்
3. வீட்டுமிருகம், கடற்கரை 4. மீன்சந்தை, ஏவுகணை

(27) பறவைகள் எங்கோ பறந்து சென்றன. இதில் பறந்து என்ற சொல்

1. வினைமுற்று 2. பெயரெச்சம் 3. வினையெச்சம் 4. கூட்டுவினை

(28) "ஊர் வாயை மூட உலை மூடி இல்லை" என்ற பழமொழி உணர்த்தும் பொருள்

1. செய்த தவறை தான் தான் தீர்க்க வேண்டும்
2. தான் செய்த தவறை யாராலும் மறைக்க முடியாது
3. பொது மக்களின் கருத்தை யாராலும் தடுக்க முடியாது
4. பொது மக்களுக்கு பேசத் தெரியாது



kalvi.lk

(29) யதார்த்தம் என்ற சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்

1. உண்மை 2. இரகசியம் 3. சந்தோசம் 4. விட்டுக்கொடுப்பு

(30) உடனிலை மெய்மயக்கமாக அமைந்த சொல்

1. விஞ்ஞானம் 2. வாய்க்கால் 3. வியர்வை 4. கம்பளம்

(31) ஒரு வேலையைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றி தருவதாக ஒருவருக்கு ………………… அளித்தால். அதனை மீறக்கூடாது.

1. ஒப்பந்தம் 2. ஒப்படை 3. உச்சவரம்பு 4. பிரகடனம்

(32) போதைவஸ்த்துக்களை பயன்படுத்துவதால் உள்ள ஆபத்துக்கள் பற்றி …………… செய்யப்பட்டது.

1. பிரசுரம் 2. பிரசாரம் 3. பிரகாரம் 4. பிரகடனம்

(33) செம்மொழியாம் தமிழ்மொழி தமிழ் மக்களால் மாத்திரமன்றி

1. பிறரும் விரும்புகின்றார்கள் 2. பிறரால் விரும்பப்படுகின்றது
3. பிறராலும் விரும்பப்படுகின்றது 4. பிறர் விரும்புகின்றார்கள்

(34) காட்டில் உள்ள ஒவ்வொரு மரமும்

1. முறிந்தன2. முறிந்தது 3. முறிகின்றன 4. முறிபடுகின்றன

(35) மாணவர் மன்ற கூட்டத்தில் செயலாளரினால் அறிக்கை

1. வாசிக்கப்பட்டது 2. வாசி**க்கப்பட்டன**
3. வாசித்தார் 4. வாசி**த்தனர்**

(36) நான் அவரை எதிர்த்துப் பேசவில்லை
அவரது பேச்சில் நியாயம் இருந்தது
மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் தர்க்க ரீதியாக இணைப்பதற்கு பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1. ஆகையால் 2. ஏனெனில் 3. ஆனாலும் 4. எனவே

(37) படித்தவர்களும் தவறு விடுகிறார்கள். இதில் படித்தவர்கள் என்பது

1. தொழிற்பெயர் 2. காரணப்பெயர்
3. இடுகுறிப்பெயர் 4. வினையாலணையும் பெயர்

(38) மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் குழியப் பாயும். இதில் வந்துள்ள பயனிலை அடைமொழி

1. மெல்லென 2. கல்லையும் 3. குழிய 4. பாயும்

(39) பின்வருவனவற்றுள் பயனிலை மறைந்து நிற்கும் வாக்கியம்

1. ஆனைக்கும் அடி சறுக்கும் 2. ஆழமறியாது காலை விடாதே
3. ஆறிலும் சாவு நூறிலும் சாவு 3. இளங்கன்று பயமறியாது

(40) சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையை தருக.

அ. இந்த மையக் கருத்தை திட்டமிடுகையில் நீங்கள் வாசகரிடத்தில் எவ்விதமான உணர்வை ஏற்படுத்த விரும்புகிறீர்கள் என்பதை முதலில் தீர்மானித்து கொள்ளவேண்டும்.

ஆ. நீங்கள் தீர்மானிக்கும் கதைக்கரு வாசகரின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் அமைய வேண்டும்.

இ. சிறுகதை என்பது ஓர் உரைநடை ஆக்க இலக்கியமாகும்.

ஈ. அப்போது கதை இயல்பானதாகவும் யதார்த்தமானதாகவும் அமையும்.

உ. எந்த ஒரு சிறு கதைக்கும் ஒரு மையக்கருத்து இருக்க வேண்டும்.

1. உ, இ, அ, ஆ, ஈ 2. இ, அ, உ, ஈ, ஆ
3. இ, உ, அ, ஆ, ஈ 4. உ, அ, இ, ஈ, ஆ

(40x1=40 புள்ளிகள்)



kalvi.lk

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி JAFFNA HINDU COLLEGE

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
# JAFFNA HINDU COLLEGE

| 22 | T | I |
|---|---|---|

## முதலாந் தவணைப் பரீட்சை - 2017
## 1st Term Examination - 2017

தமிழ் மொழியும் இலக்கியமும்
Tamil

நேரம் Time: 1மணித்தியாலம்

தரம் Grade: 10

பகுதி Part: II

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடையைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

(01)சுருக்கமான விடை தருக.

I. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
"மறையென லறியா மாயமி லாயமொடு"

II. பின்வரும் வாக்கியத்தில் எழுவாய், பயனிலையைக் குறிப்பிடுக.
"துன்னிற்று என்னவும் வந்தது தோணியே"

III. பின்வரும் வாக்கியத்தினை பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இட்டுத் திருப்பி எழுதுக.
கண்ணன் கர்ணனிடம் பாண்டவர்களுக்காக தூது போனான்

IV. கட்டுரை ஒன்றின் பயன், பெறுமானம், விளைவு என்பனவற்றைத் தீர்மானிக்கும் பகுதி எது?

V. ஒரு வயது சென்ற கிழவி வைத்தியசாலைக்குச் சென்றாள். இந்த வாக்கியத்தில் காணப்படும் மயக்கத்தை இனங்கண்டு வாக்கியத்தை திருத்தி எழுதுக.

VI. கீதா கடைக்குச் சென்றாள்
கீதா கடையில் பொருள்களை வாங்கினாள்.
மேலேயுள்ள வாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக. அது வாக்கிய வகைகளில் எவ்வகையினைச் சார்ந்தது எனக் குறிப்பிடுக.

VII. "இஞ்சை ஒண்டுமில்லை" என்பதை எழுத்துவழக்குத் தொடராக மாற்றுக.

VIII. "ஜீவனோபாயம்" என்ற சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச்சொல்லை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக?

IX. மொழியின் இரு வடிவங்களும் எவை?

X. கலை என்ற சொல் பெயராகவும், வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக?

(10x2=20புள்ளிகள்)



kalvi.lk

(02)பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

I. காட்டுவளம் என்பது ஒரு நாட்டின் இயற்கைச் செல்வமாகும். காடுகளில் வளர்ந்த மரங்கள் மனிதனின் பல்வேறு தேவைகளுக்கும் உதவுகின்றன. காலநிலையை சமப்படுத்துவதிலும் அது உதவுகின்றன. காலநிலையை சமப்படுத்துவதிலும் அது உதவுகின்றது. பல்வகை உயிர்களது புகலிடமாக அது விளங்குகின்றது. இயற்கைச் சமநிலையை பேணுவதிலும் அதற்கு பங்கு உண்டு. ஆயின் இன்று மனிதனது பொறுப்பற்ற நடவடிக்கைகள் காரணமாக காடுகள் வேகமாக அழிந்து விடுகின்றன. எனவே காட்டுவளத்தை பாதுகாப்பது மனிதன் ஒவ்வொருவரதும தலையாய கடமை எனும் கருத்துக்கள் அமையுமாறு ஓர் விளக்கக் கட்டுரை.

II. தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்று மாணவர்களிடையே செல்லிடப்பேசி, கணினி முதலான இலத்திரனியல் கருவிகளின் பாவனை அதிகரித்துள்ளன. குறுஞ்செய்தி, மின்னஞ்சல், முகநூல், இணையம் முதலியவற்றினூடாக அவர்கள் விரைவாக தகவல்களைப் பெறுகின்றனர், பரப்புகின்றனர். அறிவு பெருகுகின்றது. எனினும் இவற்றால் படிப்பில் கவனமில்லை. படிப்பதில் கவனமின்மை, துஷ்பிரயோகங்கள் என்பவற்றிற்கும் வழி ஏற்பட்டு விடுகின்றது. இவ்வாறாக இலத்திரனியல் ஊடகங்களால் மாணவர்கள் சமூகத்திற்கு ஏற்படும் நன்மை, தீமை பற்றி இருவருக்கிடையே நடைபெறும் உரையாடல்.

III. இயற்கை அன்னை நமக்களித்த பரிசு பூமி. அது எம்மைத் தாங்குகின்றது. வாழவழி செய்கின்றது. நீர் தருகின்றது. தாவரங்கள் வளர உதவுகின்றது. உணவுச் சங்கிலி, உணவு வலை என்பவற்றைப் பேணி நாம் வாழ வழிவகுக்கின்றது. எனவே நாம் அதனை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. பூமியின் இயற்கைத் தன்மையைப் பேணி அதிக நன்மைகளைப் பெற முயற்சித்தல் வேண்டும் என சமூக விழிப்புணர்வு ஏற்படும் வகையில் ஒரு சொற்பொழிவு.

IV. கமலன் படிப்பிலும், பிறசெயற்பாடுகளிலும் கெட்டிக்காரன் தான். எனினும் வீட்டில் அடங்காப் பிள்ளையாகவே நடந்துகொள்வான். தாய், தந்தையை மதிப்பதில்லை. தான் என்னும் அகந்தை குடி கொண்டது. படிப்படியாக படிப்பில் ஆர்வம் குறைந்து கொண்டு வந்து நடத்தைக் கோலங்களிலும் அபரிமிதமான மாற்றங்கள். இதன் விளைவாக ஏற்பட்ட சமூகப் புறக்கணிப்புகள்... இது தொடர்பாக ஓர் சிறு கதை.

(25 புள்ளிகள்)

(03)கீழே தரப்பட்டுள்ள உரைநடைப் பகுதியின் கருத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

கூட்டுறவு என்றால் பலர் ஒன்றி வாழ்தல் அல்லது ஒன்று சேர்தல் எனப் பொருள்படும். ஒத்துழைப்பு, ஐக்கியம் என்ற சொற்களும் இதே கருத்தை விளங்குகின்றன. பொருளாதாரத் துறையில் கூட்டுறவு என்னும் சொல் ஒரு விசேட கருத்துடன் வழங்கப்படுகின்றது. அதாவது பலர் ஒரு குறித்த பயன் கருதி ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தலை இது குறிக்கின்றது. இப்படி மக்கள் ஒருமித்து ஏதோ ஒரு பயன் விரும்பி சில நிபந்தனைகளுக்கு அமைய முயற்சிப்பதே கூட்டுறவு இயக்கமெனவும் ஐக்கிய இயக்கமெனவும் ஒத்துழைப்பு இயக்கமெனவும் நாம் கூறுகின்றோம். கூட்டுறவு ஒரு பழைய சீவிய முறை. தனித்தனியாக ஒன்றும் செய்ய முடியாதவர்கள் ஒருமித்து ஒத்துழைத்து கடினமான கருமத்தை ஒப்பேற்றுகின்றார்கள். இதனால்



kalvi.lk

தான் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற அமரகவி பாரதியார் கூறுகின்றார். எமது மூதாதையர் சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை என்பதை உணர்ந்து கூட்டுறவு முறையை வாழ்க்கையில் அநேக வழிகளில் பயன்படுத்தினர். ஒரு சுற்றாடலில் வசித்தவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து தமது வீடுகளை வேய்ந்தார்கள். ஒற்றை மாடு மட்டும் வைத்திருந்த விவசாயி தனது அயலவனிடம் மாட்டை வாங்கி தனது கமத்தை உழுது பண்படுத்தினான். பின் தனது எருதை தன் நண்பனுக்குக் கொடுத்து அவனும் தனது விளை நிலத்தை செப்பனிட உதவியாக இருந்தான். ஒற்றுமையின் சிறப்பினால் இவர்கள் வாழ்க்கையை செவ்வனே நடத்தினார்கள்.

(04)பின்வரும் உரையாடல் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

உலோகாயுதத்தை அடிப்படையாகக் கொண்ட மேனாட்டு நாகரீகங்கள் மகத்தானவை யெனினும் நிலையற்று மறைந்திருக்கின்றன. மேனாட்டார் மனிதனாகிய உடம்பு உயிரை பெறுவதற்காக நம்புகின்றனர். நாமோ மனிதனெனும் ஆத்மா உடம்பைத் தாங்கித் தோன்றுவதாக எண்ணுகின்றோம். இந்திய நாகரிகமும் அதன் வழிவந்த சீனா, ஜப்பான், நாகரிகங்களும் பல தடவை அழிந்தும் இன்னும் வாழ்கின்றன. உலோ**காயத அடிப்படை**யின் நாகரிங்கள் அழிந்தாலும் மறுபடி வாழ்வதில்லை.

I. உலோகாயத நாகரிகம் என்றால் என்ன?

II. மனித வாழ்வைப் பற்றி மேனாட்டவரினதும் **கீழ்நாட்டவரினது**ம் அபிப்பிராயங்கள் எவை?

III. பலதடவைகள் அழிந்தும் இன்றும் வாழ்கின்ற நாகரிகங்கள் எவை?

IV. உலோகாயதத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரிகங்கள் எவை?

V. மகத்தான நாகரிகம் எனக் குறிப்பிடப்படுவது எது?

(2x5= 10 புள்ளிகள்)

(05)இன்று மக்களிடையே டெங்கு, பன்றிக்காய்ச்சல் தாக்கம் அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட குழப்பங்கள், நோய் தொடர்பான அச்சம் என்பன நிலவுகின்றது. எனவே அந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் அந்நோயின் தாக்கம் மக்கள் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு மக்களை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பத்திரிகைக்கு 100 சொற்களில் ஒரு கடிதம்.

அல்லது

அரசாங்க பாடசாலைகளில் கல்வி இலவசமாக வழங்கி வருவது ஒரு வரப்பிரசாதமாகும். இவ்வாறு கல்வியை இலவசமாக வழங்குவதன் முக்கியத்துவத்தினைக் குறிப்பிட்டும் இதனால் மாணவர்களாகிய நாம் அடையும் நன்மைகள் பற்றி விளக்கியும் 100 சொற்களில் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
JAFFNA HINDU COLLEGE

| 22 | T | III |
|---|---|---|

244

முதலாந் தவணைப் பரீட்சை - 2017
1st Term Examination - 2017

தமிழ்
Tamil - III

நேரம் :- 2மணித்தியாலம்
Time :-2 Hour

தரம்
Grade 10

## பகுதி - III

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கு விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. சுருக்கமான விடை தருக.

(1) கோயிலாலருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது.
அ. எக்கோயிலாலருக்கு வழக்கு நடந்தது?
ஆ. இவ் இரு பகுதியினருக்கும் ஆதரவாக விளங்கியவர்கள் யாவர்?

(2) (i) 'நட்பொரீஇ'
(ii) 'கேண்மை கெழீஇ'
அ. இத்தொடரின் கருத்து யாது?
ஆ. இத்தொடரின் கருத்தோடு தொடர்புபடுத்தப்படுபவைகளை குறிப்பிடுக.

(3) "......... பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகுமே"
அ. "பெரும் படை" என இங்கு குறிப்பிடப்படுபவை எவை?
ஆ. "நிழலாகுமே" - எது நிழலாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?

(4) "ஆவாகணம் பண்ணிப் பக்கத்தில் வைத்து விட்டு பாடம் சொல்வது வழக்கம்"
அ. எதனை எதனில் ஆவாகாணம் பண்ணினார்?
ஆ. இக்கூற்றோடு தொடர்புபடுத்தப்படுபவர் யார்?

(5) "பண்டே பழகியிருந்தாலும் அறியார்"
அ. யார் யாரை அறியார்?
ஆ. இத்தொடரோடு தொடர்புபடுத்தப்படுவது எது?

(6) "புலனழிந்துதொரு புத்துயிர் எய்துவேன்"....
அ. இங்கு புலன் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை குறிப்பிடுக?
ஆ. இவ்வாறு புத்துயிர் எய்த காரணம் யாது?

(7) "பொழிந்த நெய் ஆகுதி வாய் வழிப் பொங்கி......"
அ. இவ் பாடல் அடி அமைந்து காணப்படும் இலக்கியம் எது?
ஆ. இப்பாடல் அடி மூலம் இவ் இலக்கியத்தில் குறிப்பிடப்படுபவர்?

(8) அ. நாலடியார் எனும் இலக்கியத்தை தொகுத்தவர் யார்?
ஆ. இவ் இலக்கியம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?

(9) "சீரெடுத்த புலையிற் சாரர்கள்......."
அ. புலையிற் சாரர்கள் என்பதன் பொருள் யாது?
ஆ. இவர்கள் யாருடைய வரவினை எதிர்பார்த்துக் காத்தல் போல் காத்திருந்தேன்?

(10) ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் -
வாடி இருக்குமாம் கொக்கு.
அ. எங்கு வாடி இருக்கும் கொக்கு?
ஆ. உறுமீன் என்பதில் உறு என்பது எவ்வகைச்சொல் அதன் விளக்கத்தினைக் குறிப்பிடுக?

(10x2=20 புள்ளிகள்)



kalvi.lk

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) உப்பில்லா கஞ்சியினை யுண்ணும் அறுசுவை போல்
தப்பிய கந்தை பீதாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலை பாயிற் படுத்துறக்கும் வாழ்வார்.
மனம் கொண்டது மாளிகை.

அ. இப்பாடலைப் பாடியவர் யார்? (2 புள்ளிகள்)

ஆ. இங்கு அமைந்து காணப்படும் முதுமொழிகள் குறிப்பிட்டு அது எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதை விளக்குக? (3 புள்ளிகள்)

(ii) நீரெடுத்து வருவதற்கு அவள். மணி
நித்தி லப்புன் னகைசுடர் வீசிடப்
பேரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தோறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
சீரெடுத்த புலையியற் சாரர்கள் ..........."

அ. வேரெடுத்து என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது? (2 புள்ளிகள்)

ஆ. "சுதந்திர நற்பயிர்" என்பதில் கையாளப்பட்டுள்ள அணி யாது? விளக்குக? (3 புள்ளிகள்)

(iii) பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்று சொல்கின்ற "பிறகு" அந்த சபையில் நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்து விட்டார்கள். தபால் தந்திக்கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. "ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றி பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்" என்றார் நாவலர் அவர்கள்.

அ. சபை இருந்த நிலை பற்றிக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ஆ. நாவலர் அவர்களின் ஆளுமைப் பண்பு எவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது? (3 புள்ளிகள்)

(iv) இந்த இருவரும் சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்குப் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்வசன வாக்குரிமையை பற்றி அந்த காலத்தில் பேசுவது கிடையாது. உரிமை உள்ளவர்களும் குறித்த ஓரிடத்துக்குப் போய் தமது வாக்கை இன்னாருக்கென்று வழங்குவதும் இல்லை. கல்விமான்கள், பிரபுக்கள் கூட்டங்கூடி தங்கள் அபிப்பிராயத்தை அரசாங்கத்தார்க்கு தெரிவிப்பது வழக்கம்.

அ. சர்வசன வாக்குரிமை என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ஆ. இலங்கை பிரதி நிதித்துவம் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டது. (3 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

03. நட்புபற்றி "யானை அனையவர்......"
அடக்க முடையார் பற்றி - (அடக்கமுடையார் அறிவிலார் ....." என்னும் செய்யுட்களில்

அ. எடுத்துக் கூறப்பட்டுள்ள விடயங்களை விளக்குக?

ஆ. இச்செய்யுட்களில் அமைந்து காணப்படும் அணி சிறப்பினை விபரிக்குக?

***அல்லது***

"சுயசரிதை என்னும் பகுதியில்.

அ. "காத்திருந்து அவர் போம் வழி முற்றிலும்..." என்னும் செய்யுளில் காதல் உணர்வு அணிச்சிறப்பு.

ஆ. "புலன்களோடு கரணமும் ...." நலன்களை அடைதல் பற்றி எடுத்துக் கூறப்பட்ட விடயங்களை விளக்குக. (15 புள்ளிகள்)

04. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையில்

அ. கூட்டம் கூட்டப்பட்டதன் நோக்கம், கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள்

ஆ. "நாவலர் எழுந்த விதம்" பற்றியும் எடுத்து விளக்குக? (15 புள்ளிகள்)

❖ **5,6 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

05. "உருவத்தில் சிறியதன் சிறப்பு....." வெற்றிவேற்கை எனும் நீதிப்பாடலில் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்பதை விபரிக்குக?

(10 புள்ளிகள்)

06. அ. கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் பற்றியும்,

ஆ. இலங்கை சட்டசபை பிரதிநிதித்துவத்திற்கு போட்டிபோட்டவர்கள் பற்றியும், கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளவற்றை விளக்குக? (10புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page